[திரு. இரா. நெடுஞ்செழியன்] [2nd July 1962

கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நன்ருக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கனம் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபைத் தலைவர் அவர்களே, கூடிய வரையில் தமிழிலேயேதான் பதில்களைக் கொடுக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய கவனமும் செலுத்தப்பட்டுதான் வருகிறது. ஆனல் சில சமயங்களில் அவ்வாறு பதில் அளிப்பதற்கு போதிய பக்குவம் இல்லாத காரணத்தாலும், அது தவருகப் போய் விடலாம் என்ற காரணத்தாலும் தான் ஆங்கிலத்திலேயே பதில் கொடுக்கப்படுகிறது. கூடிய சீக்கிரத்தில் எல்லாவற்றையுமே தமிழில் பதில் கொடுக்க, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுதான் வருகிறது. ஆனல் ஆங்கிலத்தில் பதில் சொல்லும்போது சில உறுப்பினர்களுக்கு அது புரியவில்லை என்று சொன்னல் அவற்றை தமிழில் சொல்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும். அப்படி எந்த அமைச்சர்களைக் கேட்டாலும் அவர்கள் தமிழிலேயே பதில் சொல்லுவார்கள். தமிழில் மொழி பெயர்த்து பதில் சொல்லுவார்கள். ஆகவே தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்று சொன்னலும் அல்லது ஆங்கிலத்தில் சொல்லப்படும் பதில் புரியவில்லை என்று சொன்னலும் அவற்றை மொழி பெயர்த்துச் சொல்லப்படும். எல்லா பதில்களையுமே தமிழில் சொல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுதான் வருகின்றன.

IV.—ADJOURNMENT MOTSON *re.* NON AVAILABILITY OF TEXT-BOOKS PRESCRIBED FOR MADRAS CORPORATION SCHOOLS.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram has given notice of a privilege motion and it will be taken up to-morrow.

He has also given notice of the following adjournment motion :—

'I move that the business of the Assembly be adjourned for discussing the following matter of urgent public importance :

"the non-availability of text-books prescribed for Standards I to V in the schools administered by the Corporation of Madras and the consequent hardship to a large number of students." '

The hon. Member will now state his case.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நேற்றைய தினம், சில கார்ப்பொரேஷன் உறுப்பினர்களும் பெற்றேர்களும் என்னை சந்தித்து கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் வைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற புத்தகங்களின் காப்பிகள் கடைகளில் கிடைக்கவில்லை என்றும், அவைகளில் சிலது அச்சடிக்கப்படவில்லை என்றும் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து இரண்டு வாரங்களாகி

2nd July 1962] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

யும் இன்னும் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும் புகார் சொன்னார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று என்னிடம் வந்து சொன்னார்கள். அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். அந்தப் புத்தகங்கள் கடைகளிலும் கிடைக்கவில்லை என்றும், அச்சாபீஸ்களிலும், கிடைக்கவில்லை என்றும், சமீபத்தில் கிடைக்கும் என்று அறிகுறிகூட இல்லை என்றும் சொல்கிறார்கள். இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்றும் என்னிடம் வந்து கேட்டார்கள். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். சபையின் கவனத்திற்கும் கனம் நிதி அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வந்தால் இதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொள்வார்கள் என்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கின்றேன். புத்தகங்கள் கிடைப்பதற்கு இரண்டொரு நாட்கள் கால தாமதமானால் பாதகமில்லை என்றாலும் பரவாயில்லை. ஒரு வாரத்திற்கு மேல் கால தாமதமாகிறது. இப்படி கால தாமதமானால் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்த பிறகு எப்படி படிப்பது என்பது தெரியவில்லை. நமது பிற்கால சந்ததியார்கள் இப்படி படிக்க முடியாமல் இருந்தால் என்ன செய்வது என்று புரியவில்லை. இது ஒரு முக்கியமான பிரச்னை. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் எழுப்பிய பிரச்னையைப்பற்றி தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. நான் தெரிந்து கொண்ட அளவில் அங்கே இதற்கு முன் இருந்த ஸ்டாண்டிங் கமிட்டி மாறிவிட்டது என்றும், இவர்களால் அதை மாற்றி அமைக்க முடியவில்லை என்றும் தெரியவருகிறது. கூடிய சீக்கிரத்தில் புத்தகங்கள் பள்ளிக்கூடங்களுக்குக் கிடைத்துவிடும் என்று தோன்றுகிறது. ஆகவே இதற்கு ஒரு அவசர ஒத்திவைப்பு பிரேரபணை வேண்டியதில்லை என்று தோன்றுகிறது. ஆகவே இப்படிப்பட்ட அவசரப் பிரேரேபணை வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் கனம் அங்கத்தினர் 41-ஆவது விதிப்படி நோட்டீஸ் கொடுத்தால் அதைப்பற்றி இன்னும் இரண்டு நாட்களில் அங்கு இருக்கக்கூடிய நிலைமையை உணர்ந்து கொண்டு புள்ளி விவரங்களை சேகரித்துக் கொண்டு அதைப்பற்றி ஒரு ஸ்டேட்மெண்டை சபையின் முன் சமர்ப்பிக்கிறேன்.

MR. SPEAKER : There is no need for this adjournment motion as the Hon. Minister has agreed to make a statement if the hon. Member, Sri M. Kalyanasundaram would give a separate notice under Rule 41 in regard to this matter.